பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு
வெப்ப இரசாயனம்
★ ஆரம்பமாகிவிட்டது ★
பிரிவு: I
Sat, Sun 10-30 a. m.
பிரிவு. II
ஆரம்பம், 19-06-1988
Sat, Sun 1-50 p. m.
3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

A/L 89
வெப்ப இரசாயனம்
பிரிவு: III ஆரம்பமாகி விட்டது.
Sat, Sun 4.00 P. m
ஆசிரியர்:
திரு. நாகரெட்ணம் (B.sc)
மனல்தரை லேன்,
சுந்தர்மடம்.

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆனி மீ 16 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 15 ( 30 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 119

## வடபகுதியில் உள்ள

# மக்கள் வங்கிக் கிளைகளின் உயிர் ஊசலாட்டம்?

## விதியை நிர்ணயிப்பதற்கு அடுத்தவாரம் கொழும்பில் மாநாடு

— அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் உயிர் ஊசலாடுகிறது. அவற்றின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய மாநாடு ஒன்று அடுத்த வாரம் கொழும்பில் நடைபெற உள்ளது.

அந்த மாநாட்டின்போது வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளை மூடுவதா அல்லது மறுசிரமைப்பதா என்பது குறித்து முடிவுசெய்யப்படுமாம்.

வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிகளின் நிதி நிலைமை, முன்னேற்ற நிலைமை என்பவற்றை ஆராய்வதற்காக கொழும்பில் உள்ள உயரதிகாரிகள் முன்னர் இங்கு வருடாந்தம் வருவது வழக்கம்.

ஆனால் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இப்போது திடீரென வடக்கில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளை மூடுவது குறித்து மேலிடத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறிய வருகிறது.

இது சம்பந்தமாக முடிவு செய்வதற்காக அடுத்த வாரம் கொழும்பில் முக்கிய கூட்டம் ஒன்று நடக்கவிருக்கிறது.

வடக்கில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து

( 6ஆம் பக்கம் பார்க்க )

### முச்சந்தி முரளி



பிரதமர் பிரேமதாச நடமாடும் மினிக்கச்சேரியை நடத்தினால், நாங்கள் நடமாடாத மினிக்கச்சேரியை நடத்தினால் என்ன என்டு அவை யோசிச்சினமோ......!

## அடியாருக்கு நேர்ந்த கதி!

யாழ்ப்பாணம், ஜூன் 30

அம்பாள் தரிசனம் பெறுவதற்கு வந்த அடியார் ஒருவர் அமைதிப் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டார்.

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியின் சமீபமாக இச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

மேற்படி அடியார் (இளைஞர்) அம்பாள் தரிசனம் செய்வதற்காக ஆலயத்திற்கு வந்திருந்தார்.

அவ்வேளை வீதியால் அமைதிப் படையினருடன் வந்த முகமூடி ஒருவர் இவரைப் பார்த்துத் தலையாட்டியதை அடுத்து அவர் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டார்.

அவர் பின்னர் விடுவிக்கப்பட்டாரா இல்லையா என்பது பற்றித் தெரியவரவில்லை. (ஒ-10)

## 'மினிக் கச்சேரி' நடத்தியவர் படையினர் வலையில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூன்30

சிவில் நிர்வாகம் சிர்குலைந்து இருப்பதைப் பயன்படுத்தி, 'மினிக்கச்சேரி' நடத்திவந்த நபர் ஒருவர் அமைதிப் படையினரின் வலையில் சிக்கினார்.

அவரது 'மினிக்கச்சேரி'யில் இருந்த போலித் தஸ்தாவேஜுக்களும் அமைதிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

சம்பவம்பற்றி அறிய வருவதாவது:-

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து நாவலர் வீதியில் முகாமிட்டுள்ள அமைதிப்படையினர் யாழ்-கச்சேரி நல்லூர் வீதியில் ஒரு வீட்டைச் சுற்றிவளைத்தனர்.

சுற்றிவளைப்பைத் தொடர்ந்து வீட்டிலே உள்ள அனைவரும் விசாரிக்கப்பட்டதை அடுத்து வீடு தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது. தேடுதலின்போதே பிரஸ்தாப போலித் தஸ்தாவேஜுக்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுக்களில் பாலிப் பிறப்பு, இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்களும், போலி றப்பர் முத்திரைகளும், போலி சாரதி லைசென்ஸ் புத்தகங்களும் பெரும் அளவில் அடங்கியிருந்தன.

குறிப்பிட்ட வீட்டின் சொந்தக்காரரை தம்முடன் அழைத்துச் சென்ற அமைதிப்படையினர் அவரைத் தீவிர விசாரணைக்குட்படுத்தினார்கள்.

இந்த விசாரணையின் போது பிரஸ்தாப வீட்டின் உரிமையாளர் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசின் பத்திரங்களைப் போலியாகத் தயார்பண்ணி அதிகாரிகளின் போலி றப்பர்முத்திரை பதித்து விற்பனை செய்பவர் என்பது தெரியவந்ததாம். (ஒ-9)

## டில்லியிலிருந்துவந்தகையோடு டிக்ஸிற் ஜே. ஆருடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 30

இந்தியத் தூதர் திரு. ஜே.என்.டிக்ஸிற் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பினார்.

அன்று இரவே ஜனாதிபதி ஜெயவர்த்தனவை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்று அறிவிக்கப்பட்டது.

புதுடில்லியில் கடந்த திங்கள் பிரதமர் ராஜீவ் காந்தியை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசியிருந்தார்.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற அரசியல் விவகார அமைச்சரவை உபகுழுக் கூட்டத்திலும் திரு டிக்ஸிற் கலந்துகொண்டு இலங்கை நிலைமைபற்றி எடுத்துரைத்தார்.

திரு. ஜெயவர்த்தனவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் விவரங்களை திரு. டிக்ஸிற் வெளியிடவில்லை. (ஒ-எ)

## ஆஸ்பத்திரியில் தலைகீழாக நின்ற நபர்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

சைக்கிள் திருடச் சென்ற நபர் ஒருவர் பல மணிநேரம் தலைகீழாக நின்றார்.

நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் இச் சம்பவம் நடைபெற்றது.

மேற்படி நபர் போலித் திறப்பு ஒன்றைக் கொண்டு ஊழியர்கள் சைக்கிள் பாதுகாப்பில் நின்ற பல சைக்கிள் ஒன்றைத் திறக்க முயற்சிசெய்து கொண்டிருந்தார்.

அப்போது ஊழியர்கள் அந்த நபரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து நையப்புடைத்த தில் தாம் சைக்கிள் திருடுவதற்கு வந்ததை ஒப்புக்கொண்டார்.

இதனை அடுத்து அந்த நபர் பலமணி நேரமாக தலைகீழாக நிறுத்தி வைக்கப்பட்டுப் பின்னர் எச்சரித்து விடுவிக்கப்பட்டார். (ஒ-1 )

## ஆயுத முனையில் கொள்ளை

ஒட்டுசுட்டான் ஜூன் 30

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள சில கிராமங்களிலுள்ள வீடுகளில் ஆயுதமுனையில் கொள்ளையர்கள் நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்து வருகின்றனர். (ஒ-113)

## வவுனியா அரச அதிபர் கொழும்புக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வவுனியா அரசாங்க அதிபர் திரு.ரீ.லோகேஸ்வரன் நாளை முதலாம் திகதி முதல் கொழும்பிலுள்ள புனர் வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளராசப் பதவியுயர்வு பெற்றுச் செல்ல உள்ளார்.

வவுனியா அரசாங்க அதிபர் பதவிக்கு திரு. எஸ். இராமநாதன் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இராமநாதன் யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராக செயலாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-ச-9)

## பிரி. தூதரக செயலாளர் யாழ்.வருகிறார்

பிரிட்டிஷ் தூதரகத்தின் முதலாவது செயலாளரும் வேறு பிரதிநிதிகளும் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை ஆரம்பமாகவுள்ள

# ஜி. சீ. ஈ. பரீட்சைக்கான வினாத்தாள்கள் வந்துவிட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 30

நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள விசேட ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் விமானம் மூலம் வந்து சேர்ந்துள்ளன.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன,

கடந்தவருடம் டிசம்பர் மாதம் நடைபெற இருந்து, தடைப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விசேட பரீட்சையாக நாளை முதலாம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஒன்பதாயிரத்து ஐம்பத்தி ஒன்பது பேரும் பாடசாலைப்பரீட்சார்த்திகளாக 15 ஆயிரத்து இருநூற்றியிருபத்தொன்பது பேருமாக மொத்தம் 24 ஆயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது பேர் தோற்றவுள்ளனர்கள்.

இப்பரீட்சைக்கென யாழ். குடாநாட்டில் 152 பரீட்சை நிலையங்களும், பளையில் நான்கு பரீட்சை நிலையங்களும், முல்லைத்தீவில் பன்னிரண்டு பரீட்சை நிலையங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ். கல்வித் திணைக்களத்தால் பரீட்சையில் கடமை யாற்றவென 480 உத்தியோகத்தர்களும் மேலதிக நியமனங்கள் ஊடாக 500 பேருமாக மொத்தம் 980 உத்தியோகத்தர்கள் கடமை புரியவுள்ளனர்.

நாளை நடைபெற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்துழைக்குமாறு அதிபர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஜூன் 30

நாளை முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள விசேட ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை ஒழுங்காக நடைபெறச் சகலரையும் ஒத்துழைக்கும்படி வடமாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளைச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. பூ. க. இராசரத்தினம் விடுத்துள்ளார்.

பல சிரமங்களுக்கு மத்தியில் எமது சங்கத்தினதும், வேறுபல சங்கங்களினதும் வேண்டுகோளுக்கிணங்கவே கல்வி அமைச்சு மேற்படி பரீட்சையை நடத்த இணங்கியுள்ளது.

எனவே இந்தப் பரீட்சை திறம்பட நடைபெற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

இவ்வாறு அந்தவேண்டுகோளில் மேலும் கோரப்பட்டுள்ளது. (ஒ-9)

## கிளிநொச்சி அரச அதிபருக்கு சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்.30

அடுத்த மாதம் முதல் ஓய்வுபெற இருந்த கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தேவநிகாமணிக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அவர் ஒப்பந்த அடிப்படையில் அரச அதிபராகக்கடமையாற்றப் பணிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

### சுபநேரம்

30 - 06 - 1988
ஆனி - 16
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.26 முதல் 08.56 வரை
ராகுகாலம்:
01.26 முதல் 02.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# சட்டவிரோதமாக மரம் ஏற்றி வருவதை நிறுத்துமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்30

சட்டவிரோதமாக மரம் வெட்டுவோரும், அவற்றைக் கொண்டு வருவோரும் அவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படையின் யாழ். நகரக் கொமாண்டர் அலுவலகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] ஏற்றிவரும் வாகனங்கள் அனைத்தும் தீவிரமாக சோதனையிடப்படும்.

அரச மரக்காலை கூட்டுத்தாபனத்தின் அனுமதிப் பத்திரம் (பெர்மிட்) இல்லாமல் வரும் வாகனங்கள் தடுத்து வைக்கப்படுவதுடன் அவற்றில் ஏற்றி வரப்படும் மரங்களும் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு அந்தப் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ-க)

# திருமலை நகரில் கிரனேட் வீச்சு!

## ஒரே நாளில் 2 இடங்களில்

திருகோணமலை, ஜூன்30

திருகோணமலை நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு கிரனேட்வீச்சுச் சம்பவங்களில் ஐந்து ஸ்ரீலங்காப் பொலீஸாரும் மூன்று சிவிலியன்களும் காயம் அடைந்தனர்.

### முதலாவது சம்பவம்

செவ்வாயன்று அதிகாலை 1-30 மணியளவில் கடற்படைத் தளத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்லும் பாதையால் ரோந்து சென்ற பொலீஸார் மீது கிரனேட் வீசப்பட்டதாம்.

இதனால் சப் இன்ஸ்பெக்டர் இருவர் உட்பட [illegible] இரு கான்ஸ்டபிள்களும் காயமடைந்தனர் மூவரும் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதி இந்திய அமைதிப் படையினரால் சுற்றிவளைத்துத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோது இருபதுக்கும் அதிகமான இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்

### இரண்டாவது சம்பவம்

செவ்வாய்க்கிழமை காலை 9-45 மணியளவில் மத்திய வீதியில் ஆதித்தன் கடைச் சந்தியில் காவலுக்கு நின்ற பொலீஸாரைநோக்கி கிரனேட் வீசப்பட்டதாம்

இதனால் இரு பொலீஸ் கான்ஸ்டபிள்களும் மூன்று சிங்களச் சிவிலியன்களும் காயமுற்றனர்.

காயமடைந்த இரு பொலீஸாரும் கடற்படை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் மூன்று சிவிலியன்களான விக்கிரமசிங்க, மாலினி, ஹேமாவதி ஆகிய மூவரும் திருகோணமலை மருத்துவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் தருவிக்க முகவர்களுக்கு அனுமதி தேவை

## கூட்டுத்தாபனத்திடம் வலியுறுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தற்பொழுது வடபகுதியில் எரிபொருள் விலை கள்ளச் சந்தையில் அதிகரித்தே காணப்படுகிறது. இதனைத் தடுக்கப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேவையான அளவு எரிபொருளை தருவித்து சகல முகவர்களுக்கும் தாராளமாக விநியோகிக்க வேண்டும்.

அவ்வாறு தருவிப்பதில் சிரமங்கள் இருப்பின் முகவர்கள் தாமாகவே வெளியிடங்களிலிருந்து தருவித்து வழங்க அனுமதியளிக்க வேண்டும்.

வடபிராந்திய பெற்றோல் முகவர்கள் சங்கம் வெகு விரைவில் வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் முகாமையாளரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்த உள்ளது.

இதற்கான தீர்மானம் நேற்று யாழ். பிர

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான ரேடியோ T. V வீடியோ டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் (வீடியோ செட் I. C டிரான்ஸிஸ்டர் அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள் R. V சென்ரர் F6 நவீன சந்தை மேல்மாடியில் யாழ்ப்பாணம். உரிமையாளர் விசு. (4732)

---

சகலவிதமான ரேடியோ வீடியோ, டெக். T. V. ஆகியவற்றில் உதிரிப்பாகங்களை (வீடியோ Head I. C. ரான்சிஸ்டர் அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடும் இடம் MiniTrades Centre J. M. C. Building No. 3, Stanly Rd, Jaffna. (4709)

---

தேக்கு அலுமாரிகள், ட்டிக்கெத்தைகள், விட் டெ ShowCase (தேக்கு). சாப்பாட்டு மேசைகள் கதிரைகள்காரியால மேசைகள், கடை ShowCase(கண்ணாடி), கண்ணாடிமேசைகள், இரும்புத் தளபாடங்கள், ண்ணாடிப் பொருட்கள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு.M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்திக்கு அருகில்) (4549)

---

சகலவிதமான T. V ரேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

---

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ செட் பெல்ற், ICகள், சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களிற்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களிற்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

---

நாராந்தனையில் பண்ணை வீதியில் ஒன்பதாம் கட்டைக்கு அண்மையில் அல்லில் எனப்படும் பதினறு பரப்புத் தோட்ட வயற் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு 27 மருவன் காமல் வீதி, யழ்ப்பாணம். [4590]

---

பாவித்த வீட்டு தளபாடங்கள் கட்டில் மெத்தைகள் சற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அல்மாரி கடைசோகேஸ் கண்ணாடி மேசை சம்பளம், ஹோல் செற், விருந்தை கதிரைகள், ஸ்ரீல் அல்மாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அல்மாரி Imported Mattress மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் சந்தியருகில். [4588]

---

### SALE

Remingtan English Typewriter 18 inch carriage contact, Tharmaratnam 12, New Road, Athiady Jaffna. (4743)

---

## விற்பனைக்கு

எம்மிடம் கொண்டா C50, C90, 4 Cycle C 70, MD 70, MB 5 Racoon Gs 125 New Brand CB 250, எலெக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள் பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக் கொள்ளலாம். திருவாசி, அசையாமணி ஸ்தூபி குத்துவிளக்கு, கோயில் பொருட்களும் பித்தளை செம்பு, அலுமினியம், எவர் சில்வர் பொருள்களும் விநியோகித்தர்கள். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி: கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4748)

---

பாவித்த புத்தக கடைக்கு அல்லது (பார்மசி) மருந்துக் கடைக்கு பாவிக்கக்கூடிய இரண்டு பெரிய சோகேஸ்கள் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தி அருகில்.) (4587)

---

### தவறிவிட்டது

றிச்சேட் ஏஞ்சல் தேவறஞ்சன் என்பவரின் அடையாள அட்டை அளவெட்டிக்கும் மருதனைமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4746)

---

706480315 என்னும் அடையாள அட்டை 26-6-88ல் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் உதயன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். (4589)

---

## தேவை

Commodore 64/Vic 20 Computer Keyboard Required C/o 257 உதயன் யாழ்ப்பாணம். [C/5584]

---

### மணமகள் தேவை

குருகுல இந்து வம்சத்தைத் சேர்ந்த லண்டனில் பொறியியலாளராக தொழில் புரியும் 36 வயதுடைய மணமகனுக்கு டாக்டர் கணக்காளர் அல்லது பட்டதாரி மணமகள் தேவை. புகைப்படத்துடனும் சாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். c/o 256, உதயன் யாழ்ப்பாணம். (4854)

---

### புதிய நாவல் வெளிவந்து விட்டது

செங்கை ஆழியானின் புதிய நாவல் தீம் தரிகிடந்தோம் வெளிவந்து விட்டது. விலை ரூபா 15/- கிடைக்கும் இடம் ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4579)

---

### புவியியல் நூல்கள்

A/L வகுப்புக்குரிய அபிவிருத்திப் புவியியல் எறியங்கள் இரண்டினதும் புதிய பதிப்புகள் வெளிவந்துள்ளன. ஆக்கியோன் க. குணராசா பிரபல புத்தகசாலைகளில் பெறலாம். இலங்கைப் புவியியல் விரைவில் வெளிவரும். (4580)

---

### சங்காபிஷேகம்

தம்பாலை அம்பலவாண சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற மணிக் கோபுர அபிஷேகம் 1-07-88 வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமை ஆலய தம்பாபிஷேக தினத்தை ஒட்டி விஷேச சங்காபிஷேகம் உற்சவமும் இடம்பெறும். (4739)

---

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

---

### கலர்ப் படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்ரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

---

### அறிவித்தல்

வட கோவை இளைஞர் கழகம் தமது செயற்பாடுகள் யாவற்றையும் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகிறோம். (-நிர்வாகக்குழு) (4541)

---

### மின்சார வசதி

நுவரெலியா, ஜூன்30 அட்டன் - கொட்டகலையில் அமைச்சர் தொண்டமானால் கட்டப்பட்ட வீடுகளைக் கொண்ட சௌமியபுரம் என்ற வீடமைப்புப் பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. [சி-58]

### சைக்கிள் திருட்டு

கோப்பாய், ஜூன்30 நீர்வேலிப் பகுதியிலும் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருகின்றன. தோட்டத்தில் தண்ணீர் இறைப்பதற்காக வீதி ஓரத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு சென்றவர் திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் காணமல் போய் இருந்தது. [சி-72]

### பிரசவ வாட்

கோப்பாய் ஜூன்30 கோப்பாய் பொது அரசினர் வைத்தியசாலையின் பிரசவ வாட் தற்போது வழமை போல் இயங்கிவருகிறது. (சி-72)

---

# இடமாற்றம்

## எம். கே. எஸ். மெடிக்கல் கிளினிக்

இதுவரை காலம் சம்பியன் லேன். கொக்குவில் கிழக்கில் இயங்கி வந்த மேற்படி கிளினிக் 27. 06. 88 தொடக்கம் கே. கே. எஸ். ரோட் 3 ஆம் கட்டை கொக்குவிலுக்கு மாற்றப்பட்டு உள்ளது (குளப்பிட்டி சந்தியிலிருந்து வடக்கே 100 யார் தூரம்.)

Dr. மு. கனகசபை

(4773)

---

# மிது வீடியோ மூவிஸ்

எமது நேற்றைய வெளியீடு!

சரத்பாபு　பானுப்பிரியா

நடிப்பில்

## ✶ மந்திரவாதி சாத்தான் ✶

இன்றைய சிறப்பு வெளியீடு!

✶ பாண்டியராஜன் ✶ ரேகா

✶ எஸ்.வி. சேகர்

✶ ரம்மியாகிருஸ்ணன்

நடித்த

## ✶ கதாநாயகன் ✶

எமது அடுத்த வெளியீடு!

## ✶ ஊமைக்குயில் ✶

படப்பிரதிகளுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

## மிது வீடியோ மூவிஸ்

பிரதான வீதி, சித்தங்கேணி.

யாழ் நகரில் சதீஸ் றெக்கோடிங் ஸ்ருடியோ

(C/ 5578)

---

# முதலாம் வருட நினைவு அஞ்சலி



## திருமதி இராசா இராசம்மா

மலர்வு: 1-1-1900　　உதிர்வு: 11-7-1987

நிதி: 30-6-1988

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவு என்றும் அகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டுவத்தை, அல்வாய் தெற்கு, அல்வாய்.　　இங்ஙனம், மக்கள், மருமக்கள், உறவினர்கள்.

(4775)

---

# திறப்பு விழா

## ஞான முருகன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி சந்தியில் கோலாகலமாக 1-7-88 (வெள்ளிக்கிழமை)

✶ திறப்பு விழா நடைபெறும் ✶

சகல

✶ மோட்டார் சைக்கிள்,

✶ சைக்கிள் உதிரிப்பாகங்கள்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

K. S. பொன்னையா.

கொக்குவில் கிழக்கு.

(சி-5585)

---

# பிரயாண ஒழுங்குகள்

## SAUDI

| | |
|---|---|
| Security Clerk | 500 & 100 |
| Food Service A T T | 350 & 100 |
| Cashiers | 550 & 100 |
| Driver - Mini Bus | 550 & 100 |
| Video Teck | 800 & 100 |
| Book Shop Boy | 400 & 100 |
| Medical Custodian | 400 & 100 |
| Stores Record Clerk | 550 & 100 |
| Receiving Clerk | 550 & 100 |
| Telex Operator | 500 & 100 |
| Security Supervisor | 600 & 100 |
| Security Guard | 375 & 100 |
| Fire Supervisor | 700 & 100 |
| English Typist | 600 & 100 |
| Welders Oxygen | 600 & 100 |

ஆங்கில அறிவு அவசியம்

முற்பணம் அறவிடப்படமாட்டாது

பிரயாணம் செய்ய எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் விசா வந்துபோகும் திகதி அறிவித்த பின்னர் போகாது விட்டால் கடவுச் சீட்டுத் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.

தொடர்பு;-

தலைமையகம்:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை: 1

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

மயிலங்காடு, ஏழாலை.

கிளை: 2

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

வன்னிச்சி கோவிலடி வல்வெட்டி (V. V. T.)

(சி.5588)

---

# ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி



## இராசநாயகம் அன்ரனிதாஸ் அருளழகன்

பாலனுருக்காட்டல்: 26 09-1964　　வாலனுரு மறைத்தல்: 30 06-1987

நினைவு நாள்: 30-06-1988

''சுமைதாங்கி நானே' என் வீடு வாழச்
சுடர்கின்ற விடிவெள்ளியதுவும் நானே;
அமைவாங்கு என் பெற்றோர் உடன்
பிறந்தோர்
அனைவர்க்கும் அருளாகித் தெம்பு தந்தேன்
இமைவீங்க ஏன் கண்ணீர் வடிக்க வேண்டும்?
ஈதோ நானிருக்கின்றேன்'' என்று காட்டும்
குமைவீரக் கெம்பீரக் கொலுவிருந்து
குமரா! இப்படம் தந்து எங்கு சென்றாய்?
:'ஆருண்டு காணாத கண்கள் முன்னே
அழகு விளை வாலிபனாய் வந்து நிற்கும்
விருண்ட நிலை காண்போம்; நிமிர்ந்த
தோள்கள்
விரும்பி நீ தாழ்த்த அவை அணைத்து
நிற்போம்
பேருண்ட பெருமையோடு உச்சி மோந்து
பெற்றபயன் காண்பம்? எனக் காத்திருக்க
சீராண்ட செல்வா! நீ உருமறைந்த
செய்தித் தீ ஏன் நெஞ்சில்மூட்டிவிட்டாய்?
உன் நினைவில் உயிர்தேயும்
அம்மா, அப்பா, உடன் பிறப்புகள்
மைத்துனர், மருமக்கள்.

பொயிட்டி, இளவாலை.　　(4847)

---

# 3-வது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சி. ச. நடராசா

(பிரதான வீதி, முல்லைத்தீவு)

மலர்வு: 30-09-1925　　உதிர்வு: 30-06-1985

அன்பின் இருப்பிடமாகவும், பண்போடும், பாசத்தோடும் பழகி எம்மையெல்லாம் பெரும் துயரில் ஆழ்த்தி விட்டு இறையடி சேர்ந்து இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைந்தாலும் உங்கள் மென்மையானதும் இனிமையானதுமான நினைவுகள் எங்களை விட்டு என்றுமே நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்:

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அன்னை இல்லம்,
P. W. D. வீதி,
முல்லைத்தீவு.　　(4762)

---

# நினைவஞ்சலி



## திரு. செல்லத்தம்பி நந்தகோபால் (தங்கராசா)

மண்ணில் 16- 05- 1940　　விண்ணில் 11- 07- 1987

திதி 30- 06- 1988

அன்பின் ஐயா நீங்கள் இல்லாத மனைவி பிள்ளைகளாய் நாம் என்றும் எண்ணவில்லை, ஆயினும் இது தான் விதி எமக்கு என ஆக்கி விட்டு சென்றுவிட்டீர்கள், நீங்கள் உள்ள வரை அஞ்சாத நாம் இப்போது அஞ்சி உயிர் வாழ்கிறோம். விலை மதிப்பு ஏதுமில்லாத சிகரமே எங்கு நீங்கள் சென்று மறைந்து விட்டீர்கள், பாரினில் எங்களுக்கு யார் துணையோ இறைவன் தான் பதில் தருவான்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் வாடும்
தகப்பன், மனைவி,
பிள்ளைகள், மருமகன்.

க. செல்லத்தம்பி–தகப்பன், த. தேவேந்திரராணி – மனைவி, த. உதயகுமார் – மகன், செ. இராமச்சந்திரன் – மருமகன், இ. ஜீவராணி – மகள், த. சிவகுமார் - மகன், த.கீதாஞ்சலி-மகள், த.பிறேங்குமார்–மகன்.

திருவில்,
வல்வெட்டித்துறை.

(4778)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:- 06. 09. 1906

இறப்பு:- 11.07.1987

திதி 30-06-1988

## வேலுப்பிள்ளை - பொன்னம்பலம் (பொன்னப்பு)

[இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர்]

திருக்கேதீஸ்வரத்தில் சிவபதம் அடைந்த எங்கள் தந்தையாரின் ஆத்மா சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பொ. ஞா. சோதிடராசா
''கனகபவம்''
குலனையூர்
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

வாலை அம்மன் கோவில்
உரிமையாளர்களும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் நடமாடும் ஆஸ்பத்திரிகள்

தாளையடி, ஜூன் 30

வடமராட்சி கிழக்கில் நடமாடும் ஆஸ்பத்திரிகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் உள்ள பல பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் இதன் மூலம் இலவச வைத்திய சேவைகளை தமது கிராமங்களிலேயே பெறமுடியும்.

ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி, செம்பியன்பற்று ஆகிய கிராமங்களில் இந்த இலவச வைத்திய சேவைப்பிரிவுகள் வாரத்தில் இரு நாட்கள் இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த வைத்தியசேவைப் பிரிவுகள் இயங்கவுள்ளன.

இச்சேவைக்கென அமர்த்தப்பட்டுள்ள டாக்டர் மருதங்கேணி ஆஸ்பத்திரியில் நிரந்தரமாகத் தங்கியிருந்து சேவையாற்றுவார்.

பொதுமக்கள் டாக்டரின் சேவையை எந்நேரமும் ஆஸ்பத்திரியில் வைத்தும் தமது கிராமங்களில் வைத்தும் பெறமுடியுமென பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-144)

## இதுவரை எவரும் கைதாகவில்லை

மட்டக்களப்பு ஜூன் 29

மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர் வண. பிதா சந்திரா பெர்னண்டோவின் படுகொலை குறித்து இலங்கைப் பொலிசாரினாலோ அல்லது இந்தியபடையினராலே இதுவரைக் எவரும் கைது செய்யப்படவில்லை.

இக்கொலை குறித்து விசாரணை நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை பொதுமக்கள் வலியுறுத்திவருகிறார்கள்

இலங்கை இந்தியப் படை கூட்டு விசாரணை நடைபெறலாமெனஎதிர்பார்க்கப் படுகிறது

(இ)

## திறப்பு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

மானிப்பாய் ஜூன் 30

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் தொழில் நுட்பப்பிரிவு திறப்புவிழாவும் சான்றிதழ் வழங்கலும், கண்காட்சி நிகழ்ச்சிகளும் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளன.

தொழில் நுட்பப் பிரிவை யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் திறந்து வைப்பார்.

தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டு, முறைசாராக் கல்வி, தொழில்நுட்பப் பாடங்களுக்கான விரிவான வேலைத் திட்டங்கள் போன்ற நூல்கள் அன்றையதினம் வெளியிடப்படவுள்ளன.

தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டு செயல் திட்டங்களிலும், முறைசாராக் கல்விப் பிரிவுகளிலும் சிறப்பாகப் பங்காற்றியோருக்கான சான்றிதழ் பத்திரங்களை கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் வழங்குவார்.

(இ- 90)


தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகள் எடுக்கவும்; உங்கள் அடையாள அட்டைகளுக்கு, பிளாஸ்டிக்கவர் (Laminating) அமைக்கவும்.

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
**மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C 5580)



**கொம்பியூட்டர் பயிற்சி**

**Diploma in Computer Programming in BASIC & COBOL.**

**Week Day Batch ஆரம்பம்:**
**01 - 07 - 88 - 9.00 a. m.**

**IDP** 342, K. K. S. Road (சிவன் கோவிலடி) யாழ்ப்பாணம்.

★ தெல்லிப்பளை கிளையிலும், கரவெட்டி கிளையிலும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

(சி5563)


ஜீ. சி. ஈ. விசேஷ பரீட்சை:

## பிரத்தியேக பரீட்சை மண்டபங்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 30

நடைபெறவுள்ள விசேஷ ஜீ. சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழிப் பாடமாக தமிழ் சிங்களம் ஆகியவற்றில் ஒன்றுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பிரத்தியேகமான பரீட்சைமண்டபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

இரண்டாம் மொழிப் பாடத்துக்கான பரீட்சை ஜூலை மாதம் 1 ஆம் திகதி நடைபெறவுள்ளது

இப்பரீட்சைக்கு மட்டுமெனப் பிரத்தியேகமாக பரீட்சை மண்டபங்கள் இரண்டு ஒழுங்குசெய்யப் பட்டுள்ளன

மேற்படி பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் தமது ஏனைய பாடங்களை வேறு பரீட்சை மண்டபங்களிலேயே எழுதவேண்டும்.

இப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு பிரத்தியேகமான பிரவேசக் கார்ட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. [இ-5]

## நூல் நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம் ஜூன் 30

ஆனைக்கோட்டை கலை ஒளி சனசமூக நிலையத்தினரின் பெருமுயற்சியால் புதிதாகக் கட்டப்பட்ட நூல்நிலையக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

தொழில் அதிபர் திரு மு. சுந்தரமூர்த்தி புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராஜா இதனையொட்டி மரக்கன்று ஒன்றை நட்டார்.

மெதடிஸ்த திருச்சபையினைச் சேர்ந்த அருட்திரு. கே பி கோவிந்தராஜ் 'புதிய பூமி' ஆசிரியர் திருசே. செத்தில்வேல் ஆகியோர் விழாவில் கலந்துஉரையாற்றினர்.

கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் திரு க. செ. தியாகராஜா இப்புதிய கட்டட நிதிசேகரிப்புச் சம்பந்தமாக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

(இ)

## திருவையாற்றில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

ஆடிப் பிறப்புத் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி திருவையாறுஐக்கிய விளையாட்டுக்கழகம் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்றை நடத்த எற்பாடு செய்துள்ளது.

ஆடிப்பிறப்புத் தினமான ஜூலை16ஆம்திகதி பிற்பகல் 2 மணியளவில் திருவையாறு பொது விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெறும்.

ஏ. பி. சி. என நடத்தப்படும் இப்போட்டிகளில் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் போட்டியாளர்கள்பங்கு [illegible]

இப்போட்டியில் பங்கு [illegible] 10-ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்.

(இ-7)


**அந்த நாள் முதல் இந்த நாள் வரை**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் 10 வருடங்களாக மக்கள் சேவையை மகேசன் சேவையாகக் கருதி வடஇலங்கை மக்களின் நன்மதிப்பைப் பெற்று தொடர்ந்தும் சேவையை நல்கி வரும் ஒரே ஸ்தாபனம்.

**HORIZON ENTERPRISES**

**உடனடி வேலைவாய்ப்புகள்**

✶ **குவைத்**

இன்டோர் கிளீனேர்ஸ் 50—3500/-
கிளீனேர்ஸ் (பொது) 150—3500/-

✶ **சிங்கப்பூர்**

கண்ணியமான குடும்பங்களுக்கு ஓரளவு ஆங்கில அறிவுடைய பணிப்பெண்கள் வயது (18 — 30) வரை சம்பளம் (180 S D — 200 S D)

6 புகைப்படங்கள் (பாஸ்போட் அளவு), பாஸ்போட் சகிதம் உடன் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட், விசா எந்த நாட்டுக்கான விமான டிக்கட் போன்றவைகளை நீங்கள் கொழும்பு செல்லாமல் இங்கேயே செய்து பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்து தருவோம்.

கடந்த வாரம் எம்மால் பயணம் மேற்கொண்டவர்களின் பெயர், விலாசங்கள் விபரம் வருமாறு, இந்த வாரம் பயணம் மேற்கொள்பவர்களின் விபரம் அடுத்த வாரம் வெளிவரும்.

| | |
|---|---|
| திரு T. சோமாஸ்கந்தராஜா வியாபாரிமூலை பருத்தித்துறை | H 0376620 |
| ,, S. யோகேந்திரன் வேலணை மேற்கு வேலணை | H 0381891 |
| ,, K. கணேசலிங்கம் அல்வாய் தெற்கு | J 0219885 |
| ,, S. பரநிருபசிங்கம் சோடாகொம்பனி லேன் மல்லாகம் | J 0228659 |
| ,, P. இக்னேசியஸ் மவுன்காமல் வீதி குருநகர் | J 0043407 |
| ,, S. கிருஷ்ணனந்தம் அல்வாய் தெற்கு | H 0325444 |
| ,, G. S. ரவீந்திரன் திருநகர் கிளிநொச்சி | H 0488850 |
| ,, S. ஜீவதாஸ் குடத்தனை வடக்கு | J 0334790 |
| ,, S. குமரகுருநாதன் கலட்டி அம்மன் கோவில்வீதி | H 0437469 |
| ,, M. செல்வகுலசிங்கம் குடத்தனை மேற்கு | H 0100922 |
| ,, S. சிவஞானம் குட்மியான் வரணி | H 0238494 |
| ,, M. கிருஷ்ணன் உரும்பிராய் தெற்கு | H 0434666 |
| ,, S, ரட்ணசிங்கம் நியூரோட் கொய்யாத்தோட்டம் | G 0378114 |
| ,, S. சிவாநிதி ஈச்சமோட்டை | G 0320588 |
| ,, S. ஆனந்தகுமார் கொழும்புத்துறை வீதி யாழ். | G 0018801 |
| ,, A. அருணேதயன் வேலணை மேற்கு வேலணை | H 0347627 |
| ,, E. ராசரட்ணம் அல்வாய் வடக்கு | J 0329136 |
| ,, V. J. விமலசீலன் நாத்தியா தெற்கு | G 0147542 |
| ,, R. யோகராசா சண்டிலிப்பாய் வடக்கு | S 0149276 |
| ,, A. ராஜசேகரன் செண். தாமஸ் லேன் | H 0269182 |
| ,, ரட்ணம் மாணிக்கராசா சுந்தர்மடம் யாழ்ப்பாணம் | H 0072824 |
| ,, அன்ரனி குருசு நவாலி தெற்கு மானிப்பாய் | J 0105980 |
| ,, அந்தோனிப்பிள்ளை வட்டக்கச்சி | H 0453546 |
| ,, S. யோகேந்திரன் வேலணை மேற்கு | H 0381891 |
| ,, E. பத்மராசா சுப்பிரமணியம் ரோட் அரியாலை | H 0183959 |
| ,, M. குணராசா மட்டுவில் தெற்கு சாவகச்சேரி | J 0276452 |
| ,, K. சுப்பிரமணியம் திருமகள் வீதி அரியாலை | G 033715 |
| ,, S. கணேசமூர்த்தி சாவகச்சேரி | G 0308014 |
| ,, S. சின்னத்தம்பி கரவெட்டி | G 132203 |
| ,, R. வீரசிங்கம் தாஸ்கன்தோப்பு கைதடி | G 0376085 |

குறை இருப்பின் எம்மிடம் கூறுக.
நிறை இருப்பின் மற்றவர்களிடம் கூறுக,

யாழ்நகரில் தொடர்பு முகவரி:

**46, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வந்தவர்கள் வாழ்க! மற்றவர்கள் வருக!

(C 5576)



**கேள்விக்கூறு**
**துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**24 சிறி8453 மொறிஸ் லொறிவிற்பனை**

மேற்படி லொறி விற்பனைக்கு கேள்விக்கூறு கோரப்படுகின்றது. உங்களது கேள்விக்கூறுகளை சீல் பண்ணப்பட்ட தபாலுறையில் வைத்து பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் துணுக்காய் என்ற முகவரிக்கு 20-7-88 ம் திகதி பி. ப: 4. 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்,

கேள்விப் பத்திர விண்ணப்பம் திருப்பிக் கொடுக்கப்படும் ரூபா 500/- பிணைப்பணமாகக் கட்டி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். நிலைமையைப் பொறுத்து கேள்விக்கூற்றை இரத்துசெய்ய சங்கத்திற்கு உரிமை உண்டு. லொறியைத் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

**பொது முகாமையாளர்.**
துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய்.
24. 6. 88 (C5567)


**முதலாவது பிறந்த தின வாழ்த்து**



**ஸ்ரீஸ்காந்தராசா செந்தூரன்**

மானிப்பாய் வாழ் ஸ்ரீஸ்காந்தராசா, தன் மனையாள் நேசராஜினிக்கும் மகிழ்வுடன் பிறந்த செந்தமிழ்ச் செல்வனும் செந்தூரன்தானும் இன்று நன்நாளாம் (30-6-88) தனில் தனது முதலாவது பிறந்த தினமதனை 'சரஸ்தான்' மானிப்பாயில் மகிழ்வுடன் கொண்டாடும்வரை, பெற்றோரும், உற்றார், உறவினரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(4844)


**கேள்விக்கூறு**
**துணுக்காய் பகுதி**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**பிளாக் ஸ்ரோன் எம். பி - 1 டீசல் என்ஜின் 31. 5 குதிரைச் சக்தி - 850 ஆர். பீ எம். வீல், ராங், சாப்ற் மற்றும் அரிசி ஆலை உபகரணங்கள்**

மேற் கூறப்பட்ட பொருட்களிற்கான கேள்விக்கூறுகள் சீல் பண்ணப்பட்ட தபாலுறையில் வைத்து பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர், துணுக்காய் பகுதி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்கு 20-7-88ம் திகதி பி. ப 4.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். கேள்விப் பத்திர விண்ணப்பம் திருப்பிக் கொடுக்கப்படும் ரூபா 250/- பிணைப்பணமாக கட்டி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பொருட்களை தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம். நிலைமையைப் பொறுத்து கேள்விக்கூற்றை இரத்துச் செய்வதற்கு சங்கத்திற்கு உரிமை உண்டு.

**பொது முகாமையாளர்.**
துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்கம்.
துணுக்காய்.
24-6-88 (C 5566)



**வேண்டுவார் வேண்டும் வரம் அருளும்**
**புங்குடுதீவு**
**அருள்மிகு அந்தோனியார் ஆலய**
**வருடாந்த உயர் திருவிழா**



கொடியேற்றம்: 01-07-88
வெள்ளி; பிற்பகல் 4-30 மணி

**நற்கருணை ஆராதனை: 02-07-88 சனி மாலை 6. 00 மணி**
**திருவிழா பூசைப் பலி: 03-07-88 ஞாயிறு காலை 8. 00 மணி**

✶ அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி
✶ பக்தர்களுக்கு அருளாசி

திருவிழாக் குருக்கள்
**அருள்திரு ரீ. யேசுதாசன் (சந்திரன்) அடிகள்**

பக்தர்களே! இவ்விழாவில் ஒன்றுகூடி
"பரமனை நோக்கிப் பண்பாடுங்கள், புனிதரை நோக்கி வரம் கேளுங்கள்"

03. 07. 88 ல் அந்தோனியார் பேராலான நல்விருந்தில் பங்குகொண்டு மகிழுங்கள். இத் தலம் நோக்கி வரும் யாத்திரிகளுக்கு ஏற்றவசதிகள் உண்டு.

**செ. தில்லைநாதன், J. P.**
புங்குடுதீவு-12

**அண்ணா கோப்பி**
அண்ணா தொழிலகம்
இணுவில், சுன்னாகம்.

**எஸ். சவரிமுத்து**
73, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**பாலவிநாயகர் றேடஸ்**
கண்டி றோட்,
கிளிநொச்சி.

(4563)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



கோயிலாக்கண்டி
**சிவசுப்பிரமணியம் சாந்திநிகேதன்**
(சாந்தன்)

**மண்ணகம்:** 03. 02. 1955 **விண்ணகம்:** 29. 06. 1980
**திதி: 30. 6. 1988** (வியாழக்கிழமை)

கனிந்த மொழியோனே
கவர்ச்சியான முகத்தோனே
துணிந்த நெஞ்சினனே
துள்ளு நடையோனே
பணிந்து நின்றோரைப்
பக்குவமாய்க் காத்தவனே
அணியும் அணியென
அன்பைப் பூண்டவனே
எண்ணிய எண்ணியாங்கு
எய்திய இயல்பினனே
விண்ணின் பதம் வேண்டி - நீர்
அண்ணலார் ஆரமுதன்
அடியினை அடைந்தாலும்
எண்ணி என்றும் எம்
இதயத்துள் இருத்திடுவோம்.

தந்தை தாயார்,
அண்ணு: பாலகேதீஸ்வரன், தம்பி: சந்திரமொலீசன், அக்காமார்: ப. கௌரிதேவி, யோ.சாவித்திரிதேவி, தங்கைமார் க. தமயந்திதேவி, நளாயினிதேவி, சாயிலக்ஷுமி; மைத்துனர்; ந. பத்மநாதன், சோ. யோகதாசன், நி. கருணநந்தன், மைத்துனி: பா.கௌசலாதேவி, மகள்: சிவகாமி, மருமக்கள்: அதிசயசொரூபி, யோகவிநாயகன், நர்த்தனசொரூபன், கார்த்திகா.
உற்றுர், அயலவர், நண்பர்கள்.

தகவல்:
வே. சிவசுப்பிரமணியம்
எபநேசர்
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர். (4583)

## மறப்பறியோம்



**ஏகாம்பரம் பார்த்திபன்**

**மண்ணுலகில்** 12- 08- 1966 **விண்ணுலகில்** 30- 06- 1986

மண்ணிலுனை வென்றிட
மாற்றுனுக்கியலாது
விண்ணிலுனை வியூகமமைத்து
வென்றனரோ
மண்ணிலுன் வீரத்தை
தியாகத்தைக் கண்டு
விண்ணவரும் வியந்தனரோ
வீரனை வரவேற்று
பார்த்திபனைப் பார்த்திருக்க
பசியோ எடுக்காது
பலகலையும் பல்துணுக்கும்
பார்த்தியுன் தனித்துவமே
பார்த்தியுன் நாமம் பலகாலம்
நிலைத்திருக்க
பலரும் இடுகின்றார் பாலகர்க்கு
நீயறிவாய்

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றுர், உறவினர், நண்பர்கள்.
பண்டத்தெருப்பு (4585)

வவுனியா விவசாயிகளுக்கு

# காலபோகச்செய்கைக்கு
# ரூ.36 லட்சம்கடனுதவி

## கிளைச்சங்கங்கள் மூலம் வழங்கப்படும்

வவுனியா ஜூன் 30

எதிர்வரும் காலபோக விவசாயச் செய்கையை ஊக்குவிப்பதற்காக வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு கிளைச் சங்கங்களின் ஊடாக 36 லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக வவுனியா மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க சமாஜத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 86-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்த சமாஜத்தின்கீழ் 77க்கும் மேற்பட்ட சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் இயங்கி வருகின்றன.

87-ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவியின் மூலம் 5 லட்சம்ரூபா வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 20 கிளைகளைச் சேர்ந்த 81 பேர் நன்மை பெற்று வருகின்றுர்கள்.

இதே ஆண்டில் 59 கிளைகளின் ஊடாக ஆயிரம் விவசாயிகளுக்கு 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உழுந்து செய்கைக்கு கடனுக வழங்கப்பட்டு மீளப் பெறப்பட்டுள்ளது.

88-ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து பெற்ற 12 லட்சம்ரூபா வீடமைப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கடனுக வழங்கப்பட்டுள்ளது.

30 கிளைகளைச் சேர்ந்த 500 விவசாயிகளுக்கு தலா 200ரூபா வீதம் 10லட்சம்ரூபா மிளகாய்ச் செய்கைக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதே வேளையில் வெங்காயச் செய்கைக்கென 7லட்சம் ரூபா கடனுக இப்போது வழங்கப்பட்டு வருகின்றது.

வீடமைப்பு விவசாய கடன்கள் மட்டுமல்லாமல் சங்கங்களின் சிறுகைத்தொழில் அபிவிருத்திக்கென 50 ஆயிரம் ரூபாவும் வரையறுக்கப்பட்ட கிளைகளின் ஊடாக 20 ஆயிரம்ரூபாவும் விசேஷ கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

பின்தங்கிய மாவட்டமான வவுனியா மாவட்டத்தின் வறிய விவசாயிகளது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் விவசாய முயற்சிகளில் அபிவிருத்தி அடையவும் தேவையான செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு சமாஜம் செயற்பட்டு வருகிறது இப்படி அவர் தெரிவித்தார்.

இலங்கை சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க சம்மேளனம் வடகிழக்கு மாகாணங்களின் புனர் நிர்மாண வேலைகளுக்கென 12 கோடியே 70 லட்சம் ரூபா நிதி வழங்கவுள்ளது.

இத்தொகையிலிருந்தும் கணிசமான அளவு வவுனியா மாவட்டத்தின் புனர் நிர்மாணத்துக்கென கடனுக வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-164)

## வரிக் கடன் சலுகை கோருகிறது வடபிரதேச மினிபஸ் சமாஜம்

யாழ்ப்பாணம் ஜூன் 30

அரசாங்கம் 1984 நவம்பர் மாதம் கொண்டு வந்த வாகனத் தடைச் சட்டத்தினுலும், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த நிலைமைகள் காரணமாகவும் மினிபஸ் உரிமையாளர்கள் காப்புறுதி வங்கிகளில் வாகனங்களைக் கொள்முதல் செய்யப் பெற்றகடன்கள், வாகன வரிகள், மோட்டார் வாகன இறைவரிகள், என்பனவற்றை செலுத்தமுடியாதவர்களாக உள்ளனர். எனவே வடபிரதேச மினிபஸ் சேவை சங்க சமாஜத்தின் கீழ் உள்ள சகல மினிபஸ் உரிமையாளர்களுக்கும் மேற்குறிப்பிட்ட வரி, கடன் விடயங்களில் விசேட சலுகைகளை வழங்க அரசும், சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களும் முன்வரவேண்டும்.

மேற்கொண்டவாறு வடபிரதேச மினிபஸ் சேவைசங்கங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. இ. செல்வராசா, தந்தி மூலம் ஜனுதிபதி நிதியமைச்சர் போக்குவரத்து அமைச்சர், வங்கி பொது முகாமையாளர்கள், காப்புறுதித் தலைவர் ஆகியோரைக் கேட்டுள்ளார்.

வாகனங்களைக் கொள்முதல் செய்வதற்காகப் பெற்ற வங்கி கடன்களைப் பொறுத்தவரை வட்டிச் சலுகைகள் வழங்கும் படியும்—

காப்புறுதி என்பவற்றில் தவணைப் பணம் கட்டுவதில் கால அவகாசம் வழங்கும்படியும்—

வாகனவரி, இறைவரி என்பனவற்றில் மற்றுங் கவேகுறித்த காலங்களுக்குரிய வரிகளை ரத்துச் செய்யும்படியும்— தந்தியில்கேட் ப்பட்டுள்ளது.

## தீ விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்30

சமையல் செய்துகொண்டிருந்த இளம் பெண்ணின் மீது மேலே இருந்து எண்ணெய்க் சான் ஒன்று வீழ்ந்தது.

அதிலிருந்த மண்ணெண்ணெய் முழுவதும் அவர் மேல் கொட்டியதால் உடலில் தீப்பிடித்து அவர் பலத்த காயங்களுக்குள்ளானுர்.

சி. கமலாதேவி என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-9)

ஈழம் வாழ் மக்களுக்கு
ஓர் நற்செய்தி!!

சென்னை மவுண்ட்ரோட் புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்லில் அமைந்துள்ள

**சாயி ரவல்ஸ்**
**அன் ரூர்ஸ்**

நிறுவனத்தார்
யாழ் மக்கள் நன்மை கருதி இப்போது 24/1, இல் சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் கிளை ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள்.

★ சத்திய சாயிபாபாவின் நேரடித் தரிசனம் பெற விரும்புகின்றீர்களா? நேரடித்தரிசனமும், ஆசிர்வாதமும் பெற்றபின்! புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பம் அளிக்கின்றுர்கள்.
★ CANADA செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்படும்.


**சாயி ரவல்ஸ்**
**அன் ரூர்ஸ்**
24/1, பெரியகடை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(அலோசியஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அருகில்)

தலைமை அலுவலகம்:
**சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
22, 1ஆம் மாடியில் ஜெமினி ஸ்ருடியோ,
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
602, மவுண்ட்ரோட்,
சென்னை 6006
தமிழ்நாடு.
தொலைபேசி: 475382 [C5424]

## வெள்ளி விழா இசையரங்கு

வடமாநில சங்கீதக் கல்வி அதிகாரியும் பொன்னலையைச்சேர்ந்த வருமானசங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளையின் இசைஅரங்கேற்றம் இருபத்தைந்தாவது ஆண்டை நிறைவு செய்யும் வெள்ளிவிழா இசை அரங்கு எதிர்வரும் 4-ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் பொன்னலை வரதராஜப்பெருமாள்தேவஸ்தானத்தில் நடைபெறும். (இ-161)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



திரு.
**R. N. தம்பித்துரை இராஜசிங்கம்**
**K. M. N; P. P. M.**
(Retired Deputy Director of Police
Kualalumpur, Malaysia)

**தோற்றம்:** 4. 9. 1929 **மறைவு:** 26. 5. 1988

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் கடமையில் கண்ணியமாய் நேர்மையின் இலக்கணமாய் வாழ்ந்தீர்! திடீரென எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு மறைந்து விட்டீர். உம் இனிய நினைவுகள் எம்நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
தாயார் திருமதி கனகமணி தம்பித்துரை
சகோதரி திருமதி S.R. புலேந்திரன்
வதிரி உறவினர்.
(4582)

## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**சுவாமிநாதன் ஹரிகரன்**
**( லெப். குட்டிக்கண்ணு )**

**தாயின் மடியில்:** 1968—3—21 **தாயக மண்ணில்:** 1987—7—12

**திதி: 30—6—88**

பண்பின் உறைவிடமே! பாசத்தின் பிறப்பிடமே!! வீரத்தின் விளைநிலமே!! விடுதலை ஒன்றையே உயிர்மூச்சாகக்கொண்ட வீர வேங்கையே நீ வெற்றி வாகையுடன் வருவாய் என்றிருந்தோம். ஆனுல் வீர சுவர்க்கம் அடைந்து விட்டாய்.

என்றும் உன் இலட்சியம் நிறைவேறவும் உன் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர், நண்பர்கள்;
(4842)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**மகேந்திரன் ஜெயரூபன். நீர்வேலி**
(பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் - 1985)

**அன்னை மடியில்** 15.03.1962 **அலை கடல் மடியில்** 30.06.1985

அன்பின் சொரூபமே! அறிவின் இருப்பிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே! குமாரர்களில் மூத்தவனே!
பட்டப் படிப்புக்காய் திட்டமிட்டு சென்றவனையால்
ஆராதனை செய்து பேராதனைக்கனுப்பினமே
திசை திருப்பி யமராசன் திசைமாறு கொண்டு சென்றுன்
நண்பர்கள் பலர் சூழ திண்ணமுடன் சென்ற உனையால்
அலைக் கடலுக் கிரையாக்கி தலை குலைய வைத்தனனே
நெஞ்சம் துடிக்குதடா தஞ்சமென்றிருந்தோமே
கண்ணீர் அஞ்சலியை கடவுளுக்கு அர்ப்பணித்து
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்

நின் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, தங்கை, தம்பி
இராச வீதி,
நீர்வேலி. (4584)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை

**பொருள்:**

(அரசர் மறைபொருள் பேசும்போது) எப்பொருளையும் உற்றுக் கேட்காமல், தொடர்ந்து வினவாமல், அப்பொருளை அவரே விட்டுச் சொன்னபோது கேட்டறிய வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 24805 22073

30-06-1988 த. பெ. இல. 23


## வெந்த புண்ணில் வேல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்போது அமைதி நிலவுகிறது. படையினர்—போராளிகள் மோதல்கள் நடைபெறுவதில்லை. சில கிராமங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை. மக்களது நாளாந்த வாழ்க்கை பாதிப்புறாமல் நடக்கிறது. நிர்வாகச் சீர்குலைப்பு ஏற்பாடுகளும் வாபஸ் பெறப்பட்டு விட்டதால் மக்கள் தங்கள் தேவைகளை எப்படியோ பூர்த்தி செய்ய முடிகிறது.

இவ்வாறு எமது மட்டக்களப்புச் செய்தியாளர் அறிவித்திருக்கிறார். தொல்லைகள், தொந்தரவுகள், பதற்றம் நீங்கி மக்கள் நாளாந்த ஜீவனோபாயத்தை தேடிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி இருப்பது எல்லோருக்கும் திருப்தி அளிக்கவே செய்யும்.

அரசியல் உரிமைகளோடு கூடிய, அமைதி வாழ்க்கையே மன நிம்மதியானது. எனினும் வேண்டாத தொல்லைகள் இல்லா வாழ்க்கை ஓரளவேனும் பரவாயில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டியது தான். மட்டக்களப்பு மக்கள் அந்த மனப்போக்குடனேயே இப்போதைய சூழ்நிலையைக் கருதுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தங்கள் விவகாரங்களை தாங்களே நிர்வகித்து, பிறர் எவரதும், எவ்வித தலையீடும் இன்றி, தமது பிரதேசத்தை தாமே அபிவிருத்தி செய்து, தங்களையும், மண்ணையும் தாமே பாதுகாத்து, வளம் காணக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டாலே தமிழர்களுக்கு நிச்சயமான, நிம்மதியான வாழ்க்கையை நிரந்தரமாகக் காணமுடியும்.

எனினும் நாகரீக உலகுக்கு ஒவ்வாத தொல்லைகளையும், துன்பங்களையும் எதிர்நோக்கிக் கஷ்டப்படுவதை விட, சாதாரண அமைதி நிலை பரவாயில்லை என்பது வாத்சவம் தான்.

அந்த வாத்சவ நிலையில் வாழும் மட்டக்களப்பு மக்களை, ஆயுதபாணிகள் நடத்தும் கொள்ளைகள் மனக்குழப்பம் அடையச் செய்கின்றன என்பதும் எமது மட்டக்களப்புச் செய்தியாளரின் தகவல்களில் இருந்துபுரிகிறது.

ஆயுத பாணிகள் நடத்திவரும் கொள்ளைகள் அங்கு அதிகரித்து வருகின்றன. ஒரு பக்கத்தால் ஓரளவு நிம்மதி வர, அடுத்த பக்கத்தால் பீதியுடன் வாழும் நிலை உருவாகி இருப்பது கவலைக்கு உரியது.

ஆயுதபாணிக்கொள்ளையரின் அட்டகாசம் அங்கு அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விட்டதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஆயுதபாணிக் கொள்ளையரின் தொல்லை இல்லை என்பது அல்ல.

ஆயுதம் மனிதனுக்கு எதிரியானது. அதனை எங்கு, எதற்கு, எப்போது, எப்படிப் பாவிப்பது என்பதில் கோணல் நிலை ஏற்பட்டு விட்டால், அதை விட ஆபத்தான எதிரி எதுவும் இல்லை.

அணு ஆயுதம் தொடக்கம் சாதாரண கூரிய கத்தி வரை இந்த ஆபத்து இருக்கவே செய்கிறது.

கொள்ளை அடிப்பது என்பது பிறர் பொருளைச் சுரண்டும் சமூக விரோதச் செயல். ஆயுதத்தைக் காட்டி, நிராயுதபாணிகளிடம் கொள்ளை அடிப்பது என்பது கோழைத் தனம்.

சமூக விரோதமும், கோழைத் தனமும் கலந்த ஆயுத பாணிகளின் கொள்ளை யை, யார் செய்தாலும் அது கண்டிக்கப்படவேண்டியது. தண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து உள்ளதைத் தமக்குச் சாதமாக்கித் தமிழ்ப்பகுதிகளில் கொள்ளை இடுவது, பல வழிகளாலும் கஷ்டப்பட்டும், துன்பப்பட்டும் வாழும் மக்களை மேலும் அவலத்துக்குள் விழ்த்துவதாகும். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போலாகும். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும். அது தகுமா?

ஆயுதபாணிகள் நடத்தும் கொள்ளைகளை மட்டுமன்றி சாதாரண கொள்ளைகளையும் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பொது மக்கள் உட்படச் சகல சாராரையும் சார்ந்ததாகும்.

## காட்டு மரங்களை வெட்ட விடுதலைப் புலிகள் தடை

ஒட்டுசுட்டான் ஜூன் 30

முல்லைத்தீவுப் பகுதிக் காடுகளுக்குள் உள்ள முதிரை, பாலை, யாவரணை போன்ற பெறுமதியான மரங்களை தறிப்பதற்கு விடுதலைப் புலிகள் தடை செய்துள்ளனர்.

இதை மீறுபவர்கள் தண்டிக்கப்பட்டு வருகின்றார்கள் எனத் தெரிய வருகிறது. (இ- 113)

சோவியத் யூனியன்

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட 1ஆவது ஜனாதிபதி கோர்பச்சேவ்?

## அரசியல் சீர்த்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஆட்சி சோவியத் யூனியனில் ஏற்படுத்தப் படவேண்டும் என்ற திட்டத்தை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் ஆராயத் தொடங்கினர்.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி இன்று கிரெம்ளின் மாளிகையில் ஆரம்பமானது.

அப்போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மிகெயில் கொர்பச்சேவ், மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் சமர்ப்பித்த ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்கள் அடங்கிய திட்டத்தை பிரதிநிதிகள் ஆராயத் தொடங்கினர்.

முதல் நாள் நிகழ்ச்சியின்போது திரு. கோர்பச்சேவ் புதிய திட்டங்களைச் சமர்ப்பித்து 3½ மணித்தியாலங்கள் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

அரசாங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து செயல்பட்ட நிர்வாக முறை சோவியத் யூனியனில் தோல்வி அடைந்து விட்டது.

கட்சி தனியாகவும் அரசு தனியாகவும் செயல்படவேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்ரீம் கவுன்சில் நாட்டை ஆளும் முறை அகற்றப்படவேண்டும். ஒரு நாடாளுமன்றம் நிறுவப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்ய பல வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அந்த நாடாளுமன்றம் தெரிவு செய்யும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே நாட்டை நிர்வகிக்க வேண்டும். வெளியுறவுக் கொள்கையையும் அந்த ஜனாதிபதியே வகுக்க வேண்டும்.

இதன் மூலம் பூரணமான ஜனநாயக முறை நாட்டில் அமுலாக்கப் படவேண்டும்.

இப்படி திரு. கோர்பச்சேவ் தெரிவித்தார்.

திரு. கோர்பச்சேவின் திட்டம் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டால் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு. கோர்பச்சேவ் தெரிவு செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் திரு. கோர்பச்சேவின் திட்டம் மாநாட்டில் சிலரால் கண்டிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப் பட்டது. (எ)

## நமீபியா எல்லையில் கடும் சண்டை!

கேப்டவுன்' ஜூன் 29

தென்ஆபிரிக்காப் படைகளுக்கும் அங்கோலா, கியூபா துருப்புக்களுக்கும் இடையே கடந்த செவ்வாய் ஏற்பட்ட கடும் சண்டையில்பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன என்று அறிவிக்கப் படுகிறது.

நமீபியா எல்லையில் இச்சண்டை இடம் பெற்றது என்று தெரிவிக்கப் பட்டது. தென் ஆபிரிக்காவின் தரப்பில் 11 சிப்பாய்கள் மரணமடைந்தனர் என்று கூறப்பட்டது.

இம்மோதலில் 200க்கு அதிகமான கியூபன், அங்கோலா துருப்புக்கள் கொல்லப்பட்டனர் என்று தென் ஆபிரிக்க அரசு தெரிவித்தது.

நமீபியா சுதந்திரம், அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படுவது ஆகியன குறித்த பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இம்மோதல் தடைப்படுத்துமா? என்ற கேள்விக் குறி எழுந்து உள்ளது' (எ)

## வி. பி. சிங் சவால்

அலஹபாத், ஜூன் 29

பிரதமர் ராஜீவ்காந்தி அமேதி எம். பி தொகுதியில் மீண்டும் போட்டியிட வேண்டும் என்று அலஹபாத்தின் புதிய எம்.பி விஸ்வநாத் பிரதாப் சிங் சவால் விடுத்தார்.

எதிர்க்கட்சிகள் ஒன்று பட்டு நடவடிக்கை எடுத்தால் ராஜீவ் தோல்வி அடைவதுடன் அமேதி தொகுதியை விட்டே ஓடவேண்டிய நிலைமை உருவாகும்—என்று திரு. சிங் மேலும் சொன்னார். (எ)

## ஐ. நா அதிகாரிகள் வளைகுடா விஜயம்

வாஷிங்டன், ஜூன் 29

வளைகுடா யுத்தத்தில் ரஸாயன ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தி வருகின்றது என்ற ஈரானின் குற்றச்சாட்டை நேரிற் சென்று விசாரணை செய்ய ஐ. நா முடிவு செய்து உள்ளது.

அதன்படி ஐ. நா குழு ஒன்று தெஹ்ரானுக்கு இவ்வார இறுதிக்குள் விஜயம் செய்ய விருக்கிறது. ரஸாயன ஆயுதங்களை யுத்தத்தில் ஈராக் பயன் படுத்துவதாக ஈரான் அடிக்கடி குற்றம் சுமத்தி வந்தது தெரிந்ததே.

சென்ற வார இறுதியிலும் ஈராக்' ஈரான் நகர் ஒன்றின் மீது ரஸாயனக் குண்டுகளை வீசியதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. (எ)

## ஜெரூசலம் செல்ல பலஸ்தீனியருக்குத் தடை

ஜெரூசலம், ஜூன் 29

ஜெருசலம் நகரினுள் பலஸ்தீனியர்களின் பிரவேசிப்பதை இஸ்ரவேலிய இராணுவத்தினர் நேற்றுத் தடைசெய்தனர் என்று அறிவிக்கப் பட்டது.

ஜெரூசலம் நகரை இஸ்ரவேலுடன் இணைத்த 21 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பலஸ்தீனியர்களின் கிளர்ச்சி நடைபெற்றது.

அது தொடர்பான முன் எச்சரிக்கையாகவே தடை விதிக்கப்பட்டது.

பலஸ்தீனியர்களின் பொது வேலை நிறுத்தம் காரணமாக ஜெரூசலத்தின் கிழக்கு மேற்குக் கரை காஸா, ஆகியபகுதிகளில் நாளாந்தவாழ்க்கை ஸ்தம்பித்தது. (எ)

வெளி உலகில்

## மெக்ஸிகோ அமெரிக்க நெருக்கடி

வாஷிங்டன், ஜூன் 29

மெக்ஸிக்கோவில் இருந்து தனது தூதரை அமெரிக்கா நேற்று திருப்பி அழைத்துக் கொண்டது.

போதைக் கடத்தலில் ஈடுபட்ட அமெரிக்கப் பிரசை ஒருவரை நாடு கடத்த மெக்ஸிக்கோ அரசு மறுத்ததைத் தொடர்ந்து, அமெரிக்கா இந்த முடிவை எடுத்தது. (எ)

## சிறுபான்மை அரசு

பாரிஸ் ஜூன் 29

பிரெஞ்சு நாட்டில் சிறுபான்மை அரசு ஒன்றை பிரதமர் மைக்கல் ரொச்சார்ட் அமைத்திருக்கிறார். முக்கிய அமைச்சுக்கள் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. (எ)

ஆப்கன்

# நிலக்கண்ணி வெடியில் பஸ் சிக்கியது; 17 பேர் பலி

காபூல், ஜூன் 29

கெரில்லாக்கள் வைத்த நிலக்கண்ணி வெடியில் சிக்கி அரசு பஸ் ஒன்று சுக்குநூறுகியது என்று அறிவிக்கப் படுகிறது.

இச்சம்பவத்தில் 17பேர் கொல்லப்பட்டனர்.

கிலஜபாத்துக்கும் காபூலுக்கும் இடையில் உள்ள பாலம் ஒன்றின் மீதாக பஸ் சென்று கொண்டிருந்த போதே நிலக்கண்ணி வெடித்தது என்று தெரிவிக்கப் பட்டது. (எ)

# இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபடுவது அவசியம்

## ஈ.பி. ஆர். எல். எப். அறிக்கை

திருகோணமலைஜூன்30

''விடுதலைப் புலிகள் இயக்கத்தினராயிருந்தாலும் சரி, 'புளொட்' இயக்கத்தினராயிருந்தாலும் சரி மற்றும் 'ஈரோஸ்', 'ரெலோ', 'ஈ. என். டி. எல். எப்' இயக்கங்களாயிருந்தாலும் சரி கடந்த கால பகைமைகளை மறந்து சமாதானத்திற்காகவும், அமைதியான ஜனநாயகத்திற்காகவும், அவற்றுடன் ஒன்றுபட நாம் தயாராவுள்ளோம். அதுவே எமது மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். எனக் கருதுகிறோம். ஒன்றுபடமாட்டோம் என்பதுதான் எம் இனத்தின் தோல்வியாக இருந்தால் குறைந்த பட்சம் ஒருவரை ஒருவர் அழிக்காமலாவது இருப்போம் எனக்கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு ஈ.பி.ஆர். எல்.எவ் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

நாம் அனைவருமே எமது மக்களின் விடுதலைக்காகச் சாவையும் சந்திக்கத் தயாராக பொது எதிரியான, ஸ்ரீலங்கா அரசுக் கெதிராகப் போராடமுன்வந்தோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட போராளிகளின் எண்ணிக்கையை விடஅதிகமானோர் அதாவது 1500 பேர்வரை எங்களுக்குள் நாமே நடத்தியயுத்தங்களினால் அழித்துக் கொண்டுள்ளோம். ஏன் இந்த நிலை? எதற்காக நாம் இவ்வாறுகச் செயற்பட்டோம்? செயல்படுகின்றோம்?

ஆயுத பலத்தாலும் கொலைகளினாலும் எந்தவொரு இயக்கத்தையும் எவராலும் அழித்து விட முடியாது. அதன் வளர்ச்சியை நிறுத்திவிடவும் முடியாது. அதே போல் பொது எதிரிக்கெதிராக போராட்ட சக்திகள் ஒன்றுபடாமல் வெற்றி காணவும் முடியாது. இதுதான் உலகவரலாறு எமக்கு உணர்த்தும் உண்மை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150)

## பண்டத்தரிப்பில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

பண்டத்தரிப்பு ஜூன் 30

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் மீண்டும் சைக்கிள் திருட்டுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த மாதத்தில் இதுவரை ஆறு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

வலது குறைந்த ஆசிரியர் ஒருவரின் சைக்கிளும் திருட்டுப் போய் விட்டது.

புதிய பூட்டுப்போட்டு பூட்டிய சைக்கிள்களும் நுட்பமாகத் திருடப்படுகின்றன. (இ-120)

# தொடர் மதிப்பீட்டு பரீட்சை முறையால் ஆசிரியர் அவதி

தாளையடி ஜூன் 30

வடபகுதி பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை முறையினால் வேலைப்பளு அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதியபாடத் திட்டத்தின்படி இந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜி. சி. ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை புள்ளிகளை கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

[illegible] பகுதியில் அண்மைக் காலத்தில் அடிக்கடி இடம்பெற்று வரும் ஹர்த்தால்கள், மற்றும் திடீர் ஊரடங்கு தேடுதல் நடவடிக்கையினால் பாடசாலைகள் பல நாட்கள் நடைபெறவில்லை.

இதனால் அநேக பாடங்களில் பாடத்திட்டங்கள் முடிவடையாத நிலையில் உள்ளன.

அநேக பாடசாலைகளில் முதலாம் தவணைக்கான தொடர் மதிப்பீட்டு வேலைகளே பூர்த்தி அடைந்துள்ளன.

சில கல்வி மாவட்டங்களில் சமயம், கவின்கலைப் பாடங்கள், போன்[illegible] தொடர் மதிப்பீட்டு அறிவுறுத்தல் கருத்தரங்குகளே ஆசிரியர்களுக்கு இன்னமும் நடத்தப்படவில்லை.

சில பாடங்களுக்கு தொடர் மதிப்பீடு அறிவுறுத்தல் சம்பந்தமான நூல்கள் இந்த தவணையில்தான் வந்து சேர்ந்துள்ளன.

ஆசிரியர்களும், மாணவர்களும் தொடர் மதிப்பீடு சம்பந்தமான புள்ளிகளை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்காக மிகக் சிரமத்துடன் வடபகுதியில் செயற்பட வேண்டியுள்ளது.

ஒப்படைகள் செயற்திட்டங்கள் ஆகியவற்றை செய்து முடிப்பதற்கு மாணவர்கள் அதிகளவு பணத்தை செலவு செய்து வருகின்றார்கள்.

இதனால் ஏழை மாணவர்கள் பெருமளவு பாதிப்படையக் கூடியதாகவும் உள்ளது. (இ-144)

## மத்திய கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 30

யாழ் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக றெட்பாணா இணைப்பு அதிகாரி திரு. எஸ். சோதிராஜா [illegible] ராஜா பரிசில்களை வழங்குவார். (சி)

## சமய சந்நிதிகளில்

### கும்பாபிஷேகம்

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேத்தி) அம்பாள் ஆலய புனருத்ததாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

நாளை மாலை 6 மணிக்கு விசேஷ தீபாராதனையும் திருஊஞ்சலும், இரவு 7 மணிக்கு அம்மாள் திருவீதி வருதலும் இடம்பெறும். (இ-10)

### விசேஷ அபிஷேகம்

திருநெல்வேலி, ஜூன்30

நயினை நாகபூஷணி அம்மன் கோவில் தீர்த் தோற்சவத்தையிட்டு நேற்று 29 ஆம் திகதி திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோவிலிற் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு விசேஷ அபிசேகமும், தீபாராதனையும் நடைபெற்றது. (சி)

### அபிஷேகம்

கொடிகாமம் ஜூன் 30

கொடிகாமம் மத்திய சந்தைக்கு முன்பாகவுள்ள காளிதேவி கோவில் அபிசேகம் பக்தி பரவசமாக நடைபெற்றது. [இ-75]

### அகதிகளுக்கு உடுப்பு பார்சல்கள்

முல்லைத்தீவு ஜூன் 30

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி அகதிகளுக்கு முல்லை. மாவட்ட இந்துமன்றத்தின் உபதலைவரும் முல்லைத்திவு தெற்கு கிராமோதய சபைத் தலைவருமான திரு. த. குலேந்திரன் தலைமையில் ஆயிரம் உடுப்புப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

செயலாளர் திரு. மு. குகதாசன், கொக்கிளாய் கிராமசேவை உத்தியோகத்தர் திரு.ம. நல்லைநாதபிள்ளை ஆகியோர் முக்கிய பங்கெடுத்துப் பார்சல்களை வழங்கினர். (இ-92)

## கவிதை அறிமுக விழா

கிளிநொச்சி ஜூன் 30

விவேக் எழுதிய தடயங்கள் புதுக்கவிதைத் தொகுதியின் அறிமுக விழா அண்மையில் கிளிநொச்சி விஞ்ஞான கல்வி நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு ஜெயந்தி நகரில் நடைபெற்றது.

மேற்படி கல்விநிலைய அதிபர் திரு எம். ஏ. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக பத்திரிகையாளரும் கவிஞருமான திரு. முத்துசிவன் கலந்து கொண்டார்.

கல்விநிலைய நிர்வாகியான ஆசிரியர் திரு. எ. மரியதாஸ் நூலை அறிமுகம் செய்து வைத்துப் பேசினார்.

பரந்தன் இளைஞர் வட்டத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. கே. சந்திரசேகரம் விமர்சன உரை நிகழ்த்தினார்.

இறுதியில் நூலாசிரியர் திரு மு. விவேகானந்தன் பதிலுரை வழங்கினார். (இ-76)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ ரெடிமேட் ஆடைகளுக்கு
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

30 - 06 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கு ஏற்ற
மணிப்புரி - பெனாரஸ்
காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.


## கடத்தப்பட்ட திரு. க. கந்தசாமியை விடுவிக்குமாறு மனித உரிமைகள் இல்லம் வேண்டுகோள்

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் நிவாரணப் பணிக்காகச் சேவை ஆற்றி வருபவரும் மனித உரிமைகள் இல்லத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் வேறும் பல தொண்டர் ஸ்தாபனங்களின் ஸ்தாபகருமான திரு. க. கந்தசாமி 19 - 06 - 88 ஞாயிறு அவரது யாழ்ப்பாண வாசஸ் தலத்திலிருந்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளார்.

திரு. க. கந்தசாமியை மனிதாபிமான ரீதியில் எந்தவிதத் தீங்குமின்றி விடுவிக்குமாறு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மனித உரிமைகள் இல்லம் வேண்டுகோள் விடுகிறது. (4591)

## எரிபொருள் தருவிக்க. . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) தான விதியில் உள்ள "மாக்கெட்" கட்டடத்தில் நடைபெற்ற வடபிராந்திய பெற்றோல் முகவர்கள் சங்கப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அங்கு வலியுறுத்தப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

தற்பொழுது வடபகுதிக்கு இராணுவப் பாதுகாப்புடன் எரிபொருள் ரயில்கள் இடையிடையே அனுப்பப்பட்டு வருகின்றன. அந்த எரிபொருள் ரயில்களுக்கு வழி நெடுகிலும் தீவிர இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டே இங்கு கொண்டுவரப்படுகிறது.

அப்படிக் கொண்டு வரப்பட்டாலும் 2 அல்லது 3 எரிபொருள் கொள்கலன்களிலேயே எடுத்துவரப்படுகிறது. அவ்வாறு வந்துசேரும் எரிபொருள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைகளுக்கும், காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து தொழிற்சாலைக்கும் விநியோகிக்கப்பட்டு மிகுதியே முகவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இந்த விநியோக அளவு - வடபகுதியின் எரிபொருள் தேவையை கொஞ்சமேனும் பூர்த்தி செய்வதாக இல்லை. இதன் காரணமாகவே நடைபாதை எரிபொருள் வியாபாரிகளின் பதுக்கல் நடவடிக்கைகளும், விலையேற்ற நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே 2 அல்லது 3 கொள்கலன்களில் எரிபொருள் எடுத்துவரப் பயன்படுத்தப்படும், ரயிலையும், இராணுவப் பாதுகாப்பையும் பயன்படுத்தி இன்னும் சில எரிபொருள் கொள்கலன்களை வடபகுதிக்கு எடுத்துவர அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது முடியாத பட்சத்தில் வடபகுதியின் பெற்றோல் முகவர்கள் தாமாகவே வெளியிடங்களிலிருந்து எரிபொருளைக் கொண்டுவந்து விநியோகிக்க கட்டுப்பாடுகளற்ற அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (ஓ-9)

## திருமலை'.

(1-ம்பக்கத் தொடர்ச்சி) மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

ஆதித்தன் சந்தியில் சிங்கள நடைபாதை வியாபாரிகள் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் கிரனேட் வீசியபோது வியாபாரம் செய்துகொண்டிருந்த மேற்கூறிய மூவரும் காயமடைந்தனராம்

இந்தச் சம்பவத்தை அடுத்து மத்திய வீதி, டைமன் வீதி, டொக்யாட்வீதி ஆகிய பகுதிகளுக்குள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுத் தேடுதல்வேட்டை மேற்கொள்ளப்பட்டது

கிரனேட் வீசப்பட்டதை அடுத்து நடைபாதை வியாபாரிகள் சிதறியடித்து மணிக்கூட்டுக் கோபுரப் பக்கம் ஓடினர்

இந்திய அமைதிப் படையினர் பெருமளவில் அப்பகுதிக்கு விரைந்து தேடுதல் மேற்கொண்டனர் (ஓ-150)

## பிரி. தூத . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) நாள் தங்கி நிற்கும் இவர்கள், இந்திய அமைதிப்படை அதிகாரிகளையும், பிரசைகள் குழு உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளனர்.

இராணுவத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இவர்கள் பார்வையிடுவர். (ஓ-10)

## மக்கள் வங்கி.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) கொள்வர்.

அவர்கள் தத்தமது கிளைகளின் நிதி நிலைமை, வாடிக்கையாளர் எண்ணிக்கை, கொடுக்கல் வாங்கல்கள் திறன் என்பன குறித்து விவரிப்பர்.

அவற்றைப்பொறுத்து கிளைகளை மூடுவதா அல்லது மறுசீரமைப்பு செய்து கிளைகளை இயங்க விடுவதா என்பது பற்றித் தலைமைப்பீடம் முடிவு செய்யும் என அறியவருகிறது.

பிரஸ்தாப மாநாட்டில் அடகுநகை விவகாரம், அடகு நகைகளுக்கு அறவிடப்படும் வட்டி விகிதம் என்பன பற்றி ஆராயப்படும்என அறிய வருகிறது.

கடந்த சில வருடங்களாக மக்கள் வங்கித் தலைமையகம் வடபகுதிக் கிளைகள் குறித்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும், ஏனோ தானோ என்றபோக்குடனும், அக்கறையில்லாத விதத்திலும் நடந்து வருவதால், அடுத்த வார மாநாட்டில் அது பாதகமான முடிவை எடுத்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று உள்ளூர் மக்கள் வங்கி வட்டாரங்கள் உதயனிடம் கவலை தெரிவித்தன. (அ-10)

## ஜீ. சி. ஈ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி) வுள்ள [illegible] மொழி சிங்களம் என்ற பாடத்திற்கான பரீட்சை நிலையமாக யாழ் இந்துக் கல்லூரி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திற்கான பரீட்சை இங்கு மட்டுமே நடைபெறும்.

பரீட்சை நிலையமாக செயற்படவுள்ள பாடசாலைகளில் நாளாந்த வகுப்புகள் நடைபெறமாட்டா. ஏனைய பாடசாலைகளில் ஒழுங்காக வகுப்புகள் நடைபெறவுள்ளன. (ஓ-5)


## எமது நேரடிய வெளியீடு

பத்தாம் பசலி (ஒரிஜினல்)
சரத்பாபு - அம்பிகா
'ரெண்டும் ரெண்டும் அஞ்சு'
(ஒரிஜினல்)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C5582)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை இளையதம்பி
கந்தர்மடம்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 14/1 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய இளைப்பாறிய தபாலதிபர் திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி அவர்கள் 29-6-88இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சத்தியலெட்சுமியின் அன்புக் கணவரும், நாகரஞ்சிதம், Dr. சுகிர்தரஞ்சிதம் (London), ஜெயரஞ்சிதம், சுகுணரஞ்சிதம் (ஆசிரியை, சன்மார்க்க ம. வி.), கருணாகரன், சிறீகரன் (Nigeria), சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தகப்பனும், K. பாலசந்திரன் (Electrical Engineer), S. சோமநாதன் (London), N. பாலேந்திரன் (Retired Supdt. of Audits), S. தர்மபாலன் (Family Counsellor) S. சத்தியபாமா, S கைலாயநாதன் (Electrical Engineer) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற K. சிவப்பிரகாசம், Dr. K. கனகரெத்தினம், காலஞ்சென்ற திருமதி குருநாதபிள்ளை ஆகியோரின் சகோதரனும், திருமதி சின்னத்தம்பி, M மகாரெத்தினம் (Electrical Engineer), திருமதி வாசுதேவன், M. பஞ்சலிங்கம் (Kachcheri, Jaffna), M. பரந்தாமன் (Kandy), M. யோகேஸ்வரன் (Agro Marine) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து 1-7-88 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈமக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி ச. இளையதம்பி

(4593

### திரு. சுப்பிரமணியம் குமாரசாமி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரியாலையில் வசிப்பவரும், யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கடமையாற்றியவருமாகிய சுப்பிரமணியம் குமாரசாமி மினிபஸ் மோதி அகாலமரணமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கோணேஸ்வரன் (கனடா), நகுலேஸ்வரி, சண்முகராசா (இலண்டன்), இராசேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசபிள்ளையின் மாமனாரும், ராஜினி, பகிரன், சுறேன் ஆகியோரின் பேரனும், ஐயா என்று அழைக்கப்படும் குமாரசாமியின் மைத்துனரும், தனுஷ்கோடி, கோபாலபிள்ளை, பொன்னம்பலம், சிதம்பரம்மா ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (02 - 07 - 88) காலை 10-00 மணிக்கு 35, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் நடைபெறும்.

தகவல்: க. கணேசபிள்ளை

(4592)

### சதாசிவம் சின்னத்தங்கம்

கைதடியைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் சதாசிவம் காலமானார். இவர் காலம் சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், கமலநாதன் (மக்கள் வங்கி, சாவகச்சேரி), யோகேஸ்வரன் (மே. ஜேர்மனி), மகேந்திரன் (மே. ஜேர்மனி), சிவகுமாரன் (கனடா), நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், தவநங்கை, சந்திராதேவி (மே. ஜேர்மனி) சசிகலா (மே. ஜேர்மனி), சர்வசக்திவேல் (லிங்கம் இன்டஸ்ரீஸ், கைதடி) இராஜ்குமார் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 30-6-88 நண்பகல் 12 மணியளவில் நாவற்குழி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
க. தவநாதன்.

(4591)


# றொபியலக்
## உயர்ந்த தரத்தின் மறுபெயர் !




றொபியலக் என்றதுமே உங்கள் நினைவுக்கு வருவது
நிலைத்து நிற்கும் இயல்பும் உயர்ந்த தரமுமே.
றொபியலக் இயற்கை அழிவுகளுக்கும் பங்கசுத் தாக்கத்திற்கும் ஈடு கொடுக்கும் அற்புதமான பெயின்ற். இது
கழுவித்தூய்மை செய்ய மிகவும் எளிதானது............
மற்றைய பெயின்றை நாட வேண்டியதில்லை.
றொபியலக் – உங்களை ஒரு போதும் ஏமாற்றாது.




மேலதிக விபரங்களுக்கு:-
லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760, பேஸ் லைன் வீதி,
கொழும்பு -9 .
தொலைபேசி: 598292 - 6.

LANKEM

றொபியலக் - லங்கெம் வழங்கும் ஒரு தரமான பெயின்ற்.

MINDS/LR/5

யாழ் குடாநாட்டு விநியோகஸ்தர்கள் :

V. வடிவேல்
219, 221 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜன்சிஸ் லிமிட்டெட்
176, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெகா மோட்டோர்ஸ்
நெல்லியடி.

புஸ்பா அன் கோ
128, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அபிராமி
பலாலி வீதி,
திருநெல்வேலி.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
K. K. S. வீதி,
சுன்னாகம்.

(C 5591)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30 – 06 – 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltp 292/2, Navalar Road , Jaffna on Thursday 30 th June 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org